ஏற்படுகின்றன. ஆகையினால் அரசு அந்த 'பைன்' தொகையைக் கட்ட முன் வரவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் இரண்டு தவறுகளைச் செய்கிறார்கள். எந்த ஆசிரியரையும் இந்த அரசு கட்டாயப்படுத்தவில்லை. இதை உறுதிப்படுத்திச் சொல்கிறேன். இரண்டாவதாக, ஆசிரியர்கள் படித்தவர்கள், மக்களிடையே நல்ல முறையில் எடுத்துச் சொல்வதற்குத் தகுதி உடையவர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தவறு எந்த முறையில் ஏற்பட்டது என்று பார்க்க வேண்டும். எந்த வகையில் அந்தத் தவறு ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து, அந்தத் தவறு ஆசிரியர் மேல் இல்லாமலிருந்தால், அதற்கான பரிகாரத்தை அரசு செய்யும்.

*Professor in Gynaecology and Obstetrics*

* 42 Q—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the post of Professor in Gynaecology and Obstetrics is kept unfilled for the past one year in the Thanjavur Medical College; and

(*b*) if so, the reason therefor?

**மகளிர் நோய், மகப்பேறு இயல் பேராசிரியர் பதவி**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில், மகளிர் நோய், மகப்பேறு இயல் பேராசிரியர் பதவி கடந்த ஓராண்டுக் காலமாக நிரப்பப்படாமலிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஒரு பதவி 21—1—70 முதல் 18—4—72 வரை காலியாக இருந்தது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1972 ஆகஸ்ட் 18]

(இ) இப்பதவிக்கு அடுத்து அடுத்து நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் பணியில் சேராமையே காரணம்.

## Professor of Obstetrics

* 43 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a post of Professor of Obstetrics is vacant at Thanjavur Medical College;

(b) if so, the period for which it is vacant; and

(c) the reason for not filling the same?

## மகப்பேறியல் பேராசிரியர் பதவி.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மகப்பேறியல் பேராசிரியர் பதவி ஒன்று காலியாகவுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், எவ்வளவு காலமாக அப்பதவி காலியாக வுள்ளது ?

(உ) அப்பதவி நிரப்பப்படாமல் உள்ளதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இப்போது இல்லை.

(இ) இப்பதவி 21—1—70 முதல் 18—4—72 வரை காலியாக இருந்தது.

(உ) இப்பதவியில் அடுத்து, அடுத்து நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் பணியில் சேராமையே காரணம்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, இந்த மாதிரி விசேஷத் தகுதி உடையவர்கள் நீண்ட நாட்கள் லீவில் செல்கின்றபோது, அந்தப் பதவிக்குத் தகுதியானவர்கள், அந்தப் பணியினைச் செய்யக் கூடியவர்கள் வைத்திய இலாகாவில் இல்லை